

அண்மையில் மறைந்த முன்னாள் ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் எம்.ராமச்சந்திரன் அவர்களின் இல்லம் சென்று அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. ஆறுதல் கூறினார். உடன் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி, பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் ஜெகதீசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மேயர் திருமதி அஞ்சுகம் பூபதி, ஒன்றியக் கழகச் செயலாளர் செல்வகுமார், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பொறியாளர் ஆர்.பி.பரமேஸ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.இராஜேந்திரன், பெரம்பலூர் மாவட்ட துணைச் செயலாளர் டி.சி.பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடுக:

பெண் மாவட்ட ஆட்சியருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்!

மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் தி.மு.க. சார்பில் மனு!

கள்ளக்குறிச்சி, நவ.11-

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியருக்கு தமிழக வெற்றி கழகத்தின் கள்ளக் குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அருள் விக்னேஷ் ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாக புகார் குறித்து சி.பி.ஐ. அல்லது சி.பி.சி.ஐ.டி. முழுமையாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மாவட்ட ஆட்சியர் உட்பட அனைத்து பெண் அதிகாரிகளுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் தி.மு.க. மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் கார்த்திகேயன் மனு அளித்துள்ளார். சட்டமன்ற உறுப்பினர் வசந்தவேல், நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன் ஆகியோர் உடனிருந்தனர்.

'மாவட்ட ஆட்சியருக்கே பாதுகாப்பில்லை என்பது வெட்கக் கேடானது' என்று வசந்தம் கார்த்திகேயன் அப்போது பேட்டியளித்தார்.

தேவைப்பட்டால் உரிய நடவடிக்கை கோரி நீதிமன்றத்தையும், மகளிர் ஆணையத்தையும் தி.மு.க. அணுகும் எனவும், சட்டமன்ற உறுப்பினரின் நடவடிக்கையை கண்டித்து மாபெரும் கண்டன ஊர்வலம் மற்றும் போராட்டம் நடத்திட அனுமதி கேட்டிருப்பதாகவும் வசந்தம் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

சென்னைத் தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, நவ.11

சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னைத் தெற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம் வரும் 13-11-2026 வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் சைதை பஜார் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தின் கலைஞர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.



எனவே இக்கூட்டத்தில் மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் முதலானோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள் .

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

போர்களத்தில் இருந்து பயந்து ஓட்டம்!

66 ராணுவ வீரர்களுக்கு மரண தண்டனை – காங்கோ அரசு அறிவிப்பு!

காங்கோ, நவ.11-

2025 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து தற்போதுவரை 381 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது!

காங்கோ ஜனநாயகக் குடியரசில், பயம் மற்றும் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிய மறுத்த குற்றங்களுக்காகக் குறைந்தது 66 வீரர்களுக்கு ராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளதாக, அந்நாட்டு ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

கிழக்கு காங்கோவில் உள்ள வடக்கு கிவு மாகாணத்தின் வாலிகாலேவில் அமைந்துள்ள ராணுவ நீதிமன்றத்தில் 71 வீரர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து, 66 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நான்கு வீரர்கள் விடுவிக்கப்பட்ட நிலையில், மற்றொருவருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஆயுதக் குழுக்களுடன் போரிடும் வீரர்களிடையே ஒழுக்கத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கம் என ராணுவம் தெரிவித்துள்ளது.

காங்கோ அரசுப் படைகளுக்கும், மார்ச் 23 இயக்கத்தை உள்ளடக்கிய *FRN (Front for the Refoundation of the Nation)* குழுவிற்கும் இடையே தொடர்ந்து மோதல் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இவர்களுடனான மோதலின்போது, தங்கள் நிலைகளைக் கைவிட்டுத் தப்பி ஓடியதாக, தற்போது தண்டனை விதிக்கப்பட்டுள்ள வீரர்கள் அக்.20 அன்று கைது செய்யப்பட்டனர்.

கடந்த மாதமும், கிளர்ச்சியாளர்களுடனான மோதல்களின்போது முன்னணிப் பகுதியிலிருந்து பின்வாங்கியதாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து, கோழைத்தனம் உள்ளிட்ட இதேபோன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் 27 வீரர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

வீரர்களிடையே நிலவும் பொறுப்பின்மை, பயம் மற்றும் ஒழுக்கமின்மையால், ஆயுதக் குழுக்களுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகள் பலவீனமாக இருப்பதாக கூறப்படுகிறது.

இதனால் அந்நாட்டு ராணுவம் தொடர்ந்து விமர்சனங்களைப் பெற்றுவரும் நிலையில், குறைந்த ஊதியம் மற்றும் போதிய பாதுகாப்பு உபகரணங்கள் இல்லை என வீரர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மரண தண்டனை

கடந்த 2024 மார்ச் மாதம், மரண தண்டனை மீதான 20 ஆண்டு கால தடையை காங்கோ குடியரசு நீக்கியது.

ஆயுதக் குழுக்கள், கிளர்ச்சி ஆகியவற்றில் ஈடுபடுவோர், அத்துடன் தேசத் துரோகம் மற்றும் போர்க் குற்றங்களில் ஈடுபடுவோருக்கும் மரண தண்டனை விதிக்கப்படும் என தெரிவித்தது.

மரண தண்டனையை மீண்டும் அமல்படுத்தும் முடிவு, மனித உரிமை அமைப்புகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இருப்பினும் இதுவரை எந்த மரண தண்டனையும் நிறைவேற்றப்படவில்லை.

பிரெஞ்சு ஒளிபரப்பு நிறுவனமான *RFI* தொகுத்த புள்ளிவிவரங்களின்படி, 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து தற்போதுவரை குறைந்தது 507 வீரர்கள் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர், இதில் 381 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆயுதக் கிளர்ச்சிக் குழு

FRN (Front for the Refoundation of the Nation) என்பது காங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்குப் பகுதியில் செயல்பட்டு வரும் ஒரு புதிய கூட்டணி ஆயுதக் கிளர்ச்சிக் குழுவாகும்.

இது முன்பு பரவலாக அறியப்பட்ட *M23* கிளர்ச்சிக் குழு உள்ளிட்டவற்றின் மறுவடிவமாக, பல கிளர்ச்சிக் குழுக்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போதைய காங்கோ அரசாங்கத்தை வீழ்த்துவதே இக்குழுவின் முக்கிய நோக்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த *FRN* குழுவின் தலைவராக காங்கோவின் முன்னாள் அதிபர் ஜோசப் கபிலா நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



கீழ்பெண்ணாத்தூர் காமராஜர் நகரைச் சேர்ந்த சேகர் – மகேஸ்வரி ஆகியோரின் மகள் வள்ளியம்மாள் (பள்ளி மாணவி வயது 15) சமுத்திரம் ஏரியில் குளிக்கச் சென்ற போது ஏரியில் மூழ்கி இறந்தார். அவரது உடலுக்கு சட்டமன்ற முன்னாள் துணை தலைவர் கு. பிச்சாண்டி மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் ஒன்றிய செயலாளர் ஆராஞ்சி ஆறுமுகம், பேரூராட்சி தலைவர் சரவணன், பேரூராட்சி உறுப்பினர் மணி, கீழ்பெண்ணாத்தூர் இளைஞர் அணி அமைப்பாளர் வினோத்குமார் மற்றும் கழக உடன்பிறப்புகள் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.

இன்னொரு சிறுமியும் கடத்தலா?

த.வெ.க. ஆட்சியில் குழந்தைகள் கடத்தல் அதிகரிப்பு!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, நவ.11

த.வெ.க. ஆட்சியில் கொலை, கொள்ளை சம்பவங்களோடு குழந்தைகள் கடத்தலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



செஞ்சியில் சிறுமி காணாமல் போய் இன்றுடன் 30 நாட்கள் கடந்துவிட்டன. இன்னும் அந்தச் சிறுமி மீட்கப்படவில்லை. அதற்குள், செஞ்சி அருகே ஜெயங்கொண்டான் பகுதியில் இன்னொரு சிறுமியைக் கடத்த முயன்றதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

ஆறு மாதங்களாகியும் சிறிதும் பொறுப்பில்லாத இந்த தவெக ஆட்சியில் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் அடுத்தடுத்து நடக்கும் நிலையில், இப்போது குழந்தை கடத்தலும் அதிகரித்துள்ளது.

காணாமல் போன சிறுமியை இன்னும் மீட்க முடியாமல், இந்த த.வெ.க. அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது?

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

முன்னாள் 123 'அ' வட்ட செயலாளர்

சீ.காமராஜ் 16ஆம் நாள் நினைவஞ்சலி - படத்திறப்பு நிகழ்ச்சி!

மயிலை த.வேலு – நந்தனம் மதி – எஸ்.முரளி – ராஜாஅன்பழகன் பங்கேற்பு!

சென்னை, நவ.11-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி முன்னாள் 123 (அ) வட்ட செயலாளர் சீ.காமராஜ் அவர்களின் 16ஆம் நாள் நினைவஞ்சலி மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (11.11.2026 - புதன் கிழமை) மாலை 7.00 மணியளவில் என்-பிளாக், 4/4, விசாலாட்சி தோட்டம், மயிலாப்பூர், சென்னை4 அவரது இல்லத்தில் நடைபெறு கிறது.

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு திருவுருவப் படத்தை திறந்து வைக்கிறார்.

பகுதி செயலாளர்கள் நந்தனம் மதி எம்.சி., எஸ். முரளி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜ அன்பழகன் எம்.சி., வட்டச் செயலாளர்கள் மூ.இரா ஜேந்திரன், மூ.இ.ஏழுமலை, டி.ராஜவேலு, எஸ்.ஆர். ராஜா சுரேஷ் குமார், அ. நாகராஜன் மற்றும் மாநில



மாவட்ட நிர்வாகிகள், மயிலை மேற்கு பகுதி சேர்ந்த வட்ட செயலாளர்கள், பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாநில, மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்கின்றனர்.

குடும்பத்தினர் சீ.விஸ்வநாதன் மூ.வட்ட செயலாளர், அகல்யா விஸ்வநாதன் பகுதி துணை செயலாளர், மனைவி கா.சந்திரா, சீ.வி. திவான் குமார் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர், சீ.வி.மணிகண்டன் விளையாட்டு மேம்பாட்டு அணி பகுதி துணை அமைப்பாளர், மகள்கள் சந்தியா ராஜ் குமார், சௌமியா நரசிம்மன், சரண்யா ஸ்ரீதர் ராஜ், கஜலட்சுமி வீரராகவன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சத்தியவாணிமுத்து அம்மையார்

நவம்பர் 11 (1999)



தி.மு.க. தொடங்கப்பட்ட காலம் முதல் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்.

தி.மு.கழக ஆதிதிராவிட நல உரிமைப் பிரிவுத் தலைவராகவும் – மத்திய அமைச்சராகவும் – பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் தலைமையிலான அரசில் அமைச்சராகவும் பணியாற்றியவர்.

தன்னை சுயமரியாதைக் கொள்கைகளுக்கு முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தமிழகம் முழுவதும் சூறாவளிப் பிரச்சாரம் செய்தவர்.

"அறிவியக்க வீராங்கனையாகத் திகழ்ந்து அறிவார்ந்த சமுதாயம் காணத் தொண்டாற்றிய அம்மையார்" என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகச் சார்பில் "பெரியார் விருது" பெற்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மாயவரம் கிட்டப்பா

நவம்பர் 11 (1983)



பழம்பெரும் சுயமரியாதை இயக்க வீரராகவும் – மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் நீண்டநாள் நண்பர். தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக மயிலாடுதுறை வட்டாரத்தில் கழகத்தை வளர்த்தவர்.

"நிரந்தரப் பிரிவு" என்னும் முள்ளால் நீ என்னைக் குத்தியதுதான் ஈட்டி முனையைவிடக் கூராக என் இதயத்தைக் கிழித்து விட்டது வலி தாங்க முடியவில்லையடா என் வாஞ்சைமிகு தம்பி" என தலைவர் கலைஞர் எழுதிய இரங்கற்பாவின் ஒரு பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.